## உக்குவளை பிரதேச சபை
## மாத்தளை மாவட்டம்

**1. நிதிக் கூற்றுக்கள்**

------------------------

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

-------------------------------------------

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 27 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 26 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

…………………………………

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரத்தோட்ட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

……………………………………………………..

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

…………………………..

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்பட்டிருந்த ஒரு நிலையான வைப்புத் தொகையின் வட்டி ரூபா 105,671 கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வட்டி சரியான விதத்தில் கணக்கில் காட்டப்பட வேண்டும். | 2019 ஆம் வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நூலகத்திலிருந்த நூல்களின் பெறுமதி ரூபா 574,317 குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது. | நூலகத்தின் நூல்களின் பெறுமதி மாற்றங்கள் கணக்கில் காட்டப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குள் அதை சரி செய்கிறேன். |
| (இ) | சாலைப் பராமரிப்புக்காக விசாலமான மாத்தளை நீர்த் திட்டத்தின் மூலம் சபைக்குக் கிடைத்த ரூபா 2,983,365 வைப்புக் கணக்கில் குறிப்பிடப்படாமல் வீதவரி | சரியான விதத்தில் கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குள் அதை சரி செய்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வரி வருமானக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் சபை பொது சந்தையைக் கட்டுவதற்கு ரூபா 1,999,051 நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 03 ஆம் திகதி வரை அந்தக் கட்டிடம் கட்டப்பட்டிருக்காததோடு கடன் கணக்கில் அந்தத் தொகை வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரியான விதத்தில கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குள் அதை சரி செய்கிறேன். |
| (உ) | மீளாய்வாண்டின் கைத்தொழில் நிதியுதவி ரூபா 517,956 கணக்கில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | குறைத்துக் காட்டப்பட்ட தொகை கணக்கில் காட்டப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குள் அதை சரி செய்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டில் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக செலவிட்ட ரூபா.1,435,828 கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | குறைத்துக் காட்டப்பட்ட தொகை கணக்கில் காட்டப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குள் அதை சரி செய்கிறேன். |
| (எ) | கடந்த வருடத்தின் கடனாளி மற்றும் கடன் கொடுத்தவர் அல்லாத செலவுகள் மீளாய்வாண்டில் சரியாகக் கணக்கிடப்படாததால் கடன் கொடுத்தவர் தொகை ரூபா.5,906,653 ஆகவும் கடனாளி தொகை ரூபா 286,592 ஆகவும் மேலதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியான விதத்தில கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குள் அதை சரி செய்கிறேன். |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் கடன் பெறுமதி ரூபா 73,086 மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாகக் காண்பிக்கப்பட்ட தொகையானது கணக்கில் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குள் அதை சரி செய்கிறேன். |

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மொத்தம் ரூபா 29,570,981 உள்ளடங்கிய 2 கணக்குகளுக்குரிய துணை ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ரூபா 45,972 பொருந்தாமல் காணப்பட்டது. | மீதிகளில் காணப்படும் மாற்றங்களை ஒப்பிட்டுப் பார்த்து கணக்குகளை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணம், நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலையான வைப்பீடுகளின் ஆண்டிறுதி மீதி சரியாக உள்ளது. |

**1.3.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கிடைக்க வேண்டிய கணக்குகள் | | |
| 3 வருடங்களுக்கும் மேலாக கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 47,364 ஆகும். | கிடைக்க வேண்டிய மீதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |
| (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| 3 வருடங்களுக்கும் மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,794,355 ஆகும். | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சம்பந்தப்பட்டவர்களுக்கு அதைச் செலுத்தவோ அவ்வாறில்லாவிட்டால் வருமானத்துக்குச் சேர்த்துக் கொள்ளவோ நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.4 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான அத்தாட்சிகள் காணப்படாமை**

**……………………………………………………………………………………………**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 6,450,800 பெறுமதியான 4 கணக்குகளுக்குரிய ஆதாரங்கள் முன்வைக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சரிபார்க்க முடியவில்லை. | விரிவான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வைப்புக் கணக்கின் சரியான மீதி ரூபா 5,845,160 ஆக இருக்க வேண்டும். |

**1.4 இணங்காமைகள்**

**…………………**

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

**…………………………………………………………………**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பகுதி | சபைக்குச் சொந்தமான தெருக்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான தெருக்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். | விரைவில் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இல 30/2016 பொது நிர்வாக சுற்றறிக்கை | சபையின் 5 வாகனங்கள் எரிபொருள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 5 வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் எரிபொருள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. |

**2. நிதி மீளாய்வு**

**……………..**

**2.1 நிதி விளைவுகள்**

**…………………**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,726,210 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,328,696 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் குத்துகையும் | 2,312,344 | 2,556,924 | 2,593,070 | 579,945 | 1,012,345 | 1,793,688 | 1,439,729 | 548,721 |
| (ii) வாடகை | 3,662,000 | 3,870,378 | 3,815,246 | 53,555 | 2,937,000 | 3,495,783 | 3,448,549 | 48,809 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்ட ணங்களும் | 1,630,000 | 1,559,535 | 1,559,535 | - | 1,771,000 | 1,393,430 | 1,393,430 | - |
| (iv) ஏனைய வருமானம் | 14,109,000 | 9,670,262 | 9,833,888 | 1,546,089 | 10,592,000 | 10,437,515 | 9,037,574 | 1,736,577 |
| | 21,713,344 | 17,657,099 | 17,801,739 | 2,179,589 | 16,312,345 | 17,120,416 | 15,319,282 | 2,334,107 |

### 2.2.2 வீதவரியும் வரியும

……………………..

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டின் வீதவரி விலை மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | உடனடியாக விலை மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்றுக் கொண்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்தின் விலை மதிப்பீட்டு அறிக்கையில் குறைபாடுகள் காணப்பட்டமையால் தாக்கல் செய்ய முடியவில்லை. விலைமதிப்பு அறிக்கையை திருத்தியமைக்க விலைமதிப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. |
| (ஆ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,153,397 செலவு செய்து வீதவரி அலகுகள் 6258 இற்காக வீதவரி விலைமதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த விலைமதிப்பீட்டை வர்த்தமானியில் பிரசுரித்து வீதவரி அலகுக்கான புதிய பெறுமதியை அறவிட நடவடிக்கை | கண்டறியப்பட்ட வீதவரி அலகுகளிலிருந்து வீதவரி அறவிடப்பட வேண்டும். | வீதவரி முறையில் குறைபாடுகள் இருப்பதுவும் போதியளவு வருவாய் ஆய்வாளர்கள் இல்லாமையும் இதற்குக் காரணமாகும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காமையால் அதற்காகச் செலவழித்த தொகை வீணாகிப் போயுள்ளது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையிலிருந்த வீதவரி பெறுமதி ரூபா 579,945 ஆக இருந்ததோடு, ரூபா 1000 இற்கும் ரூபா 18,424 இற்கும் இடையிலான நிலுவைத் தொகைகள் 143 காணப்பட்ட போதிலும், 1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 158 ஆவது பிரிவின் பிரகாரம் நிலுவை வீதவரி தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும், வீதவரியைச் செலுத்தாதவர்கள் தொடர்பாகவும் 1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 158 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. |

**2.2.3 நீர் கட்டணம்**

**…………….**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | --------------------------- | ----------------------- | ------------------------- |
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவையிலிருந்த நீர் கட்டணங்களின் பெறுமதி ரூபா 1,546,088 ஆக இருந்ததோடு, ரூபா 1000 இற்கும் ரூபா 19,072 இற்கும் இடைப்பட்ட தொகைகள் 423 காணப்பட்டன. அந்த நீர் இணைப்புக்களுக்கான நிலுவைத் தொகையை அறவிடுவதற்கோ, நீர் இணைப்புக்களைத் துண்டிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும், கட்டணம் செலுத்தாமலிருப்பவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 704,471 அறவிடப்பட்டிருப்பதோடு, எஞ்சிய தொகையையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நீர் கட்டணங்களைச் செலுத்தாமையால் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்த நீர் 255பாவனையாளர்களிடமிருந்து ரூபா 233,982 | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும், கட்டணம் செலுத்தாமலிருப்பவர்களுக்கெதிராக | விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

| | |
|---|---|
| நிலுவை நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2.4 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**…………………………………………………………**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 707,000 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 23,330,710 ஆகவும் இருந்தன. | நிலுவையிலிருக்கும் வருமானங்கள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**………………………**

**3.1 செயலாற்றல்**

**…………….**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) செயற்திட்டம்**

**………………**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) செயற் திட்டத்தில் சேர்க்கப்படாததும், வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படாததுமான ரூபா 8,105,498 செலவு மதிப்பிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் 35 செயற்படுத்தப் பட்டிருந்தன. | செயற்திட்ட திட்டங்கள் சரியான முறையில் தயாரிக்கப்படவும், திட்டங்களுக்கேற்ப செயற்படவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரியான முறையில் செயற்திட்ட திட்டங்களில் திருத்தங்களைச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளேன். |
| (ii) செயற்திட்ட திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்ததுவும், வருடாந்த வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருந்ததுமான ரூபா 12,500,000 செலவு மதிப்பிடப்பட்ட | திட்டமிட்டவாறு இந்த ஆண்டுக்குள் இத் திட்டங்கள் செயற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

செயற்திட்டங்கள் 8 ஐ செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பணிகளை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு சபை நிதி ஒதுக்கீட்டிலிருந்து எல்கடுவ புதிய நீர் விநியோகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 2017 திசெம்பர் 29 ஆம் திகதி ரூபா 500,000 பெறுமதிக்கு ஒப்பந்தமிடப்பட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டு மீண்டும் ரூபா 2,253,876 க்கு செலவு மதிப்பிடப்பட்ட போதும் அந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேவைகளைக் கண்டறிந்து சரியான முறையில் திட்டமிடப்படுதலும், முறையான மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய திட்டமாக மதிப்பீடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வருடாந்தம் சேரும் 4 1/2 டொன் கழிவுகளில், 1 டொன் உக்கும் கழிவுகளை கொம்போஸ்ட் உரத் தயாரிப்புக்குப் பயன்படுத்தி எஞ்சிய கழிவுகள் சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கும் விதத்தில் அகற்றப்பட்டிருந்தது. | மிகக் குறைந்தளவே சுற்றாடலுக்குத் தீங்கு விளையும் விதத்தில் கழிவகற்றல் நடைபெற வேண்டும். | கொம்போஸ்ட் உரப் பாவனை மூலமாக வீட்டுத் தோட்ட நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்க நிறுவனங்களுக்கு இலவசமாக உரம் வழங்கப்பட்டது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் குறித்து | இலக்குகள் கண்டறியப்பட்டு அவற்றை | பதிலளிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| அறிந்திருந்தும் 2018 ஜுன் 11 ஆம் திகதி வரை வறுமை ஒழிப்புக்கான இலக்குகள் அடையாளம் காணப்பட்ட போதிலும் அந்த இலக்குகளை அடையத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடையத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

………………………………..

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் நிலையில் 6 பதவிகளுக்கும், ஆரம்ப நிலையில் 6 பதவிகளுக்கும் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இரண்டாம் நிலையில் 2 பதவிகளும், ஆரம்ப நிலையில் 4 பதவிகளும் நிரப்பப்பட்டிருக்கின்றன. |
| (ஆ) | தொழிலாளர் பதவிகளில் இணைத்துக் கொள்ளப்பட்ட 6 ஊழியர்கள் சம்பந்தப்பட்ட பணிகளில் அமர்த்தப்படாது அலுவலக வேலைகளில் அமர்த்தப்பட்டிருந்தார்கள். | பணியாளர் மேலாண்மை முறையாக செய்யப்பட வேண்டும். | சேவைகளுக்கான தேவையின் அடிப்படையில் கடமைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. |
| (இ) | மீளாய்வாண்டின் மே மாதத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியரொருவரின் ரூபா 110,072 சேவகர் கடன் தொகையையும், செப்டம்பர் மாதத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் இருவரினதும் ரூபா 298,904 கடன் தொகையையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு அறியத் தரப் பட்டிருக்கிறது. |
| (ஈ) | 2012 இற்கும் 2017 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து அறவிடப்படாதிருக்கும் ஊழியர்கள் 4 பேரின் கடன் தொகையான ரூபா 35,852 ஐ அறவிட நடவடிக்கை எடுக்கப் | கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவில் சரி செய்கிறேன். |

பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் அலுவலக உதவியாளர் இருவரைப் பதவியில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் போது கல்வித் தகைமைகள் நிரூபிக்கப்படாத நிலையில் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, சேவை அனுபவங்கள் மற்றும் வாய்மொழி சோதனைகள் போன்றவற்றிலும் ஒழுங்கான நடைமுறைகள் பின்பற்றப்படாது புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தது. | நேர்மையான விதத்தில் தகுதிகளைக் கருத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**3.3 செயறபாட்டு திறமையின்மை**

………………….…………….

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------- | ------------------------ | -------------------------- |
| (அ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்றிருந்த கட்டட விண்ணப்பங்கள் 540 இல் 457 இற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை சான்றிதழ்கள் 28 விண்ணப்பங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. | தொடர்ச்சியாக பரிசோதனைக்குட்ப டுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக் குரிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டதன் பிறகு உடன்படிக்கை சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். | விண்ணப்பதாரி வேண்டுகோள் விடுத்த பின்னர் உடன்படிக்கைச் சான்றிதழை ஒப்படைப்பேன். |
| (ஆ) | முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் தொடர்பாக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் எல்லைக்குள்ளிருக்கும் முச்சக்கர வண்டிகளின் | வினவப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | விரைவில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கிறேன். |

எண்ணிக்கை எத்தனை என்பதைக் குறித்த ஆய்வொன்று நடத்தப்பட்டு வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான சுடுகாடு உட்பட்ட 46 இடங்களின் உரிமைகள் கையகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இடங்களின் உரிமை தீர்க்கப்பட வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டில், சபைக்கு வழங்கப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களின் உரிமை கையகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களின் உரிமைகளைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |

**3.4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒழுங்கான தரமற்ற நிலையில் தயாரிக்கப்பட்டிருந்த 4 மேசைகள் வாங்க ரூபா 160,000 வழங்கப்பட்டிருந்தன. | தரமான முறையில் தயாரிக்கப்பட்ட பொருட்களை மாத்திரம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்பந்தப்பட்ட தேக்கு மரப் பலகைகள் முதற் தர பலகைகள் என்பதோடு மிகவும் வலுவானவை. ஏனைய குறைபாடுகள் அவற்றை வழங்கிய நிறுவனங்களால் பூர்த்தி செய்யப்படும். |

**3.5 கொள்வனவு**

……………

**3.5.1 கொள்வனவுத் திட்டம்**

………………………

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கொள்வனவு வழிகாட்டுதல் கையேட்டின் 4.2.1 இணங்க கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடமும் சம்பந்தப்பட்ட கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 ஒப்பந்தங்கள் நிர்வாகம்**

………………………..

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | வாரியபொல கொஹொம்பிலிவெல திரு. சுப்ரமணியம் அவர்களின் வீட்டுக்கருகிலிருந்த பாதைக்கு கொங்க்றீட் இடுவது சம்பந்தமான தரப் பரிசோதனை அறிக்கைக்கிணங்க, பாதையின் தொடக்கத்திலிருந்து 30.5 மீற்றர் பகுதியானது உறுதியற்றுக் காணப்பட்ட நிலையிலும் இத் திட்டத்தின் மொத்தத் தொகையான ரூபா 438,080 மற்றும் கையிருப்பாக ரூபா 48,676 வழங்கப்பட்டிருந்தது. | இதற்குப் பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஹமர் பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. |
| (ஆ) | எல்கடுவ தோட்டத்தின் ஜல உதார சமூக அடிப்படையிலான அமைப்பின் மாற்று நீர் விநியோகத் திட்டத்தை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தின் சாத்தியக் கூறு | சாத்தியக் கூறு ஆய்வின் போது கண்டறியப்பட்ட விதத்திலேயெ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தெளிவான பதில் அளிக்கப்படவில்லை. |

அறிக்கையின் பிரகாரம் திட்டத்தில் காணப்பட்ட நீர் ஊற்றுக்களைக் கொண்ட பிரதேசத்துக்கு ஒரு கிலோமீற்றர் உயரமான மேட்டுப் பிரதேசத்தில் காணப்பட்ட புதிய நீர் ஊற்றுக்கு குழாய்கள் இட்டு தாங்கிகளுக்கு நீரைப் பெறும் திட்டமிருந்த போதிலும், தேயிலைத் தோட்டங்களுக்குக் கீழே காணப்பட்ட சிறிய ஓடையை மறித்து கொங்றீட் வேலியிட்டு நீர் விநியோகக் குழாய்க்கு நீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.